சுமையைக் குறைத்துக்கொள்ளுங்கள் ❖ Regd No M 6207

18 DEC 1954
CONNEMARA PUBLIC LIBRARY 3 - JAN 1956 MADRAS
1129 / 4-54

# கிராமோதயம்

மலர் 2 திருப்பூர் – டிசம்பர் 15 * 1954 * விலை 1 அணா இதழ் 27

## உழைப்பவனே உண்மையான முதலாளி

விநோபாஜி

முதலாளிகளிடம் இருந்து செல்வத்தைப் பறித்துக்கொள்ள வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களிடம் இருந்து பிடுங்கிக்கொள்ள லாயக்கான பொருள் என்ன இருக்கிறது என நான் கேட்கிறேன். சில மஞ்சள் கற்களை தங்கம் என்றும், சில வெள்ளைக் கற்களை வெள்ளியென்றும், சில நீல நிற கற்களை மணிகள் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். நாசிக் யந்திரசாலையில் அச்சடிக்கப்பட்ட சில காகிதங்களை பணம் என்கிறார்கள். உண்மையில் பொருள் உள்ளவன் கிராமத்தில் வசிக்கும் உழைப்பவனே யாகும். ஆனால் இன்று உழைப்பாளியான கிராமவாசி என்ன செய்கிறான்? உண்மையான லக்ஷ்மியை விற்றுவிட்டு காசு பணத்தை வாங்குகிறான். இப்பொழுது நாணயத்தைத்தான் ஜனங்கள் லக்ஷ்மியாகக் கருதுகிறார்கள். தீபாவளியன்று பனியா எதை பூஜிக்கிறான்? வெறும் காகிதத்தைத்தான் அவன் பூஜிக்கிறான் அதைத்தான் அவன் லக்ஷ்மி எனக்கருதுகிறான். ஆனால் அது உண்மையல்ல. அது நிலத்தில் அடங்கி இருக்கிறது. சகல செல்வமும் கிராமத்தில் கிராமவாசிகளிடையே இருக்கின்றன. அவர்கள் சோம்பேறிகளாய் விட்டதனால் அதை விற்பனை செய்கிறார்கள்.

ராஷ்டிபத்ரா,
11-11-'54.

★ ★ ★

## நிலச்சுவான்தார்களுக்கு ஓர் வேண்டுகோள்

மகாத்மா காந்திக்குப்பிறகு அவருடைய பிரதம சிஷ்யர் விநோபாபாவே அவர்கள் பூமிதான யக்ஞத்தின் மூலம் நமது தேசத்திற்கு நல்ல வழிகாட்டி வருகிறார். அது நாடெங்கும் வேகமாய் பரவி வருகிறதைத் தாங்கள் அறிவீர்கள்.

நாட்டின் தற்காலிக நிலைமையில் இம்மாதிரி ஒரு இயக்கந்தான் மக்களெல்லோரையும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து பாதுகாக்க முடியும். ஒரு சிலர் மட்டும் பெரிய நிலச்சுவான்தார்களாகவும், தனவந்தர்களாகவும் இருப்பதில் பயனில்லை. மக்கள் யாவரும் சுதந்திரமாய் நன்கு உழைத்து, உண்டு சுகமாய் இருப்பதவசியம். லட்சக்கணக்கான ஏழைகள் வேலையில்லாமலும் உழைப்புக்குத் தக்க ஊதியம் இல்லாமலும் வறுமையால் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் நிலை மாற பூமிதான யக்ஞமே சரியான வழியாகும்.

பூமிதானயக்ஞம் சமாதானமான முறையில் மக்களின் பொருளாதார சமூக சுதந்திரத்தையும் சமத்வத்தையும் நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. ஆகவே அதை நாம் வரவேற்று ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எனக்கு முதலில் இதன் தத்துவத்தில் சந்தேகம் இருந்தது. சர்வோதய பத்திரிகையைப் படிக்கப்படிக்க எனக்கு நம்பிக்கை உண்டாயிற்று. என் இது கால அநுபவத்திலிருந்தும் அந்த நம்பிக்கை உறுதிப்பட்டிருக்கிறது. நீங்களும் சர்வோதயப்பத்திரிகையை வாங்கிப்படித்தால் பூமிதானயக்ஞத்தின் மேன்மையை உணருவீர்கள்.

பூமிதான யக்ஞத்தைக்கண்டு யாவரும் பயப்படத்தேவையில்லை. என்னை ஒரு நிலச்சுவான்தார் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். சொத்து சேர்க்கவேண்டுமென்ற ஆசை இதுவரை எனக்கு இருந்தது. இவ்வளவு, அவ்வளவு அல்ல ஆனால் இப்போது அதற்குநேர்மாறாக சொத்துடைமையைக் குறைத்துக்கொள்ளவே மனம் சந்தோஷப்படுகிறது. நான் இதுவரை என் நிலத்தில் நாலில் ஒரு பங்கு தானம் கொடுத்திருக்கிறேன். அதுபோல் பூமிதானயக்ஞ ஆரம்பத்திற்கு முன்னும் பின்னும் என் முதலிலும் ஏறக்குறைய நாலில் ஒருபங்கு பலவாறாக தானம் செய்திருக்கிறேன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது என் சுமை குறைந்து பாரம் இலேசாய் இருக்கவும் காண்கிறேன். இன்னும் படிப்படியாகக் கொடுத்து வரவே மனம் விரும்புகிறது. உண்மையில் முன்னைக்காட்டிலும் இதனால் நான் அதிக சந்தோஷமுள்ளவனாகவே இருக்கிறேன்.

(தொடர்ச்சி 160-ம் பக்கம் பார்க்க)

# நமது சமுதாயம்

**N. S. சிவசுப்ரமணியம்**

ஆங்கிலராட்சி காலத்தும் அதற்கு முன்பும் நம் நாடு அடிமைப்பட்டு தன் வளத்தை இழந்து வறுமையுற்றது. அதன்றியும் அவர்களது வாழ்க்கை கொள்கைகளையும் உற்பத்தி முறைகளையும் தனக்கு ஏற்றதென அமைத்துக் கொண்டது. அதனால் முன்பு இருந்த பொருளாதார அமைதியும் நிறைவும் நாட்டைவிட்டு அகன்றுவிட்டன. பொருளாதார ஏற்றத்தாழ்வு விரிந்து சிலர் பெருவளம் படைத்து இயற்கை வாழ்க்கையை வாழ முடியாமல் நலியவும், பலர் வளமற்று வாழ்க்கையை நடத்தமுடியாது நலியவுமுள்ளதான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இன்று நாம் அரசியல் விடுதலையைப் பெற்றுவிட்டோம். சுதந்திரமாக நம் மேம்பாட்டிற்கு நாம் வழி செய்துகொள்ளும் பொறுப்பை வகிக்கவேண்டியவர்களாக உள்ளோம். நம் மேம்பாட்டை நம்மை அடிமைப்படுத்தியவர்கள், அவர்களைப் பின்பற்றுபவர்களின் வழிகளில் பெறுவதா, தனி வழி செல்வதா என்ற பிரச்னை நம்மை கலவரத்தில் ஆழ்த்துகிறது.

### வாழ்க்கை மேம்பாடே சுயராஜ்யம்

இன்று அரசியலாதிக்கம்-இராஜ்யாதிகாரம்-மக்கள் வாழ்க்கையில் பல பகுதிகளிலும் நுழைந்து மக்களின் வாழ்க்கையையே பிணைப்பதாக அமர்கின்றது. அத்தகைய அதிகாரம் பிறர் கையிலிருப்பது கூடாது. நாட்டு மக்களிடமே இருக்க வேண்டுமென்ற சித்தாந்தத்துடனேயே காந்தியடிகள் ஆங்கிலேயருடன் போராட்டத்தைத்தொடங்கி நாட்டிற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார். ராஜ்யாதிகாரம் காந்தியடிகளின் இறுதி இலட்சியமல்ல. மக்கள் வாழ்க்கை சிறந்த வகையில் மேம்பட அதைப் பயன்படுத்துவதையே அவர் குறியாகக் கொண்டார். ஆங்கிலேயர் முறையில் அவருக்குப் பதிலாக நம்மவர்கள் நம்மை ஆள்வதல்ல சுயராஜ்யம். அவர் ஆதர்ஸ மனித சமுதாயம் யாது என்பதை விளக்கியும், அதை நிறுவ நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்தும் வைத்துள்ளார். காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் அவருக்கு தெய்வீகம் ஏற்றியும் அவரை நாட்டில் பிதாவாக புகழ்ந்தும் நின்ற நாம் இன்று அவர் வாழ்க்கை தத்துவங்களையும், மேம்பாட்டின் வழிகளையும் ஏற்கத் தயங்குகின்றோம்; நம் நோக்கும் சிந்தனையும் வேறு வழி செல்கின்றது.

### ஆன்ம சக்தியே உயர்ந்தது

அரசியல் போராட்டத்தையே அவர் ஆத்மீக அடிப்படையில் அமர்த்தினர். மிருக பலத்தைப் புறக்கணித்து, சத்தியம், அஹிம்சை, அன்பு என்ற சாதனங்களை ஏற்று உலகு கண்டிராத புது வகையில் உலகில் பெரும்பலம் படைத்திருந்த பெரிய சாம்ராஜ்யத்தை இந்திய மக்களின் பிறப்புரிமையான சுதந்திரத்தை மதிக்கவும் அவர்களை விடுவிக்கவும் செய்தார் பகையின்றி நண்பர்களாக, அடிமைப்படுத்திய நாடும் அடிமைப்பட்டிருந்த நாடும் இதற்கு முன்பு பிரிந்தது சரித்திரிலேயே இல்லை. மண்பொருள் பெருக்கத்திற்காக தாம் அநீதத்தை ஏற்பது முறைதான் என்று கொண்டிருந்த நாடுகள் விழிப்பு பெற்றன. மனிதன் மண்பொருள் பெருக்கத்தாலும் மிருக பலத்தாலும் மட்டுமல்லாமல், ஆன்ம சக்தி பெற்றே மேம்பாட்டை அடைதல் வேண்டுமென்பதையும் அவைகள் அறியலாயின. உலோகாயதம் மனிதனை உயர்த்தவன்றி மிருக அளவிற்கு தாழ்த்திடவே உதவுகின்றதென்பதையும் சிறிதளவிற்கு அவர்கள் அறிய ஆரம்பித்துள்ளார்கள். அவர்கள் பொருளாதார அமைப்பும் பொருளாதார ஆக்கமும் இரண்டும் அவர்களையும் உலகையும் அழிக்கவே உதவுவதை அவர்கள் அறியவும் அனுபவிக்கவும் செய்கின்றனர்கள். சென்ற ஐம்பதாண்டுகளில் அவர்கள் அமைப்புகள் எப்பயனை அடைவிக்கின்றன என்பதைக் காணமலிருப்பது அவர்களாலும் கூடுவதன்று. அவர்கள் ஓரளவிற்கு அவைகளால் சலிப்பெய்தும் சமயம் காந்தியடிகள் ஆன்மீக சக்தியைக் கொண்டு அரிய சாதனையைச் செய்தது. அவர்களை நிற்கவும் சிந்திக்கவும் செய்கின்றது. அம்முறைகளை உண்டாக்கிய அவர்களே அவைகளைப்பற்றி சலிப்பெய்தும்பொழுது நாம் அவைகளில் பற்றுக்கொள்வதுதான் விந்தை அவர்கள் உதறித்தள்ள வேண்டிய நிலையிலுள்ளவைகளை நாம் பற்றிக்கொள்ள காத்திருப்பது நம்மறிவிற்கும் தனித்தன்மைக்கும் சிறப்பு செய்வதன்று.

### பெரும்போட்டு உற்பத்தி முறையின் குறைகள்

நாம் நம் வறுமையைப் போக்குவது எப்படி? வறுமை, செல்வம் இரண்டும் நாம் வாழ்க்கையைப் பற்றிக்கொள்ளும் அபிப்பிராயங்களைப் பொருத்தவைகள். உலோகாயதம் நம் இலட்சியமாயின் அதிக உணவும், அதிக உடுக்கையும், பற்பல விநோத துய்ப்புப் பண்டங்களும் அவைகளில் குவியல்களும் வேண்டும். அவைகளை உற்பத்தி செய்ய விஞ்ஞானமும் இயந்திரங்களும் வேண்டும். பெரும் போட்டு உற்பத்தி முறை அதன் அமைப்புகள், அப்பண்டங்களை விநியோகிக்க சிக்கலான முறைகள் இவைகளெல்லாம் வேண்டும். அவைகள் முதலாளி தொழிலாளிச் சண்டைகளையும், புரட்சிகளையும் உலக மகா யுத்தங்களையும் கிளப்பிவிடுகின்றன. உலக யுத்தம் மக்களை கோடிக்கணக்கில் மடிக்கவும், பலநாள் பாட்டாலான பல்பொருளை அழிக்கவுமே வழி செய்து, இறுதியில் மனிதனை வறுமையிலே உணவற்றும் உடையற்றும், இருக்கையற்றும் வாடும்படியான நிலையில் அமர்த்துகின்றது. பெரும் போட்டு உற்பத்தி முறை வேலை செய்பவனின் சுதந்திரத்தையும், அறிவையும் முயற்சியையும் பேரளவில் ஒடுக்கி அவனை சுழலும் இயந்திரமாகச் செய்துவிடுகின்றது.

இவ்வழியை நாம் பின்பற்ற வேண்டுமா? இவ்வளவு பொருள் மிகுதி வேண்டுமா? துய்ப்பு பண்டங்களின் தொகுதியும் வகையும் இவ்வளவிற்கு பெருக வேண்டுமா? அவைகளால் சிந்தனை பெற்ற மனிதன் உயர்ந்த வாழ்க்கையை வாழ்ந்து

(தொடர்ச்சி 159ம் பக்கம் பார்க்க)

3-JAN 1956



# ★ ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்! ★

— K. M. நடராஜன் —

[தமிழ் நாட்டில் பூமிதான இயக்கம் ஆரம்பித்து வெற்றிகரமாய் நடத்துவதில் தமிழ் நாடு பூமிதான இயக்கக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ச. ஜகந்நாதன் அவர்களுக்கு உதவியாக இருந்தவர் ஸ்ரீ K. M நடராஜன். தற்சமயம் ராமனாதபுரம் ஜில்லாவில் பூமிதான இயக்கப் பணி புரிந்து வருகிறார். தீவிரமிக்க இளைஞர். கற்பனையும், கருத்துச் செறிவும் நிறைந்த அவர் கட்டுரையை ஆழ்ந்த அனுபவமிக்க நிர்மாண ஊழியர் அனைவருக்கும் வேண்டுகோளாகக் கொள்ள வேண்டுகிறோம். — ஆசிரியர்]

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் காந்திய வேலைகளில் முன்னிற்கிறது என்று அனுபவம் வாய்ந்த நிர்மாண ஊழியர்கள் கூறுகிறார்கள். கதர்வேலை, ஹரிஜன முன்னேற்றம், ஆதாரக்கல்வி, ஹிந்தி பிரசாரம் முதலிய பல நிர்மாணத் திட்டங்களும் தமிழ் நாட்டில் மிகவும் தீவிரமாக நடந்து வருகின்றன. காரணம் என்ன? ஊழியர்கள் அவ்வளவு தூரம் உற்சாகமாக இந்த வேலைகளில் ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் பூதானவேலை இதேபோல தீவிரமாக நடந்துவருகிறதா என்று பார்த்தால் சிறிது கசப்பான உண்மையைக்கூற வேண்டியிருக்கிறது. நம் தமிழ் நாட்டில் ஒரு சில ஊழியர்களின் தீவிர முயற்சியால் ஓரளவு இயக்கம் நல்ல முறையில் நடந்து வந்தாலும், வட இந்தியாவில் இயக்கம் தீவிரமடைந்திருப்பதுபோல அவ்வளவு தீவிரமடையவில்லை. மற்ற காந்திய வேலைகளில் முன்னிற்கும் தமிழ்நாடு இத்துறையிலும் முன்னிற்பதாகப் பெருமை பாராட்டிக்கொள்ள முடியாமலிருக்கிறது. மற்ற காந்திய நிர்மாணத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபடும் நிர்மாண ஊழியர்களனைவரும் பூதான இயக்கத்தையும் தங்கள் வேலையாகக் கருதி அவ்வளவு தீவிரமாக ஈடுபடவில்லை என்பதைத் தவிர வேறு என்ன இதற்குக் காரணமாக இருக்கமுடியும்? இக்குறையை எத்தனையோ முறை வினோபாஜீ தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

## சமுதாய அமைப்பையே மாற்றவேண்டும்.

சமுதாய சீர்திருத்தம் வேறு. சமுதாயப் புனர் நிர்மாணம் வேறு. சமுதாயத்தில் உள்ள ஒரு சில குறைபாடுகளை நீக்கிவிட்டாலே அது சீர்திருத்தமாகிவிடும். ஆனால் சமுதாயத்தையே புனர் நிர்மாணமடையச் செய்வதற்கு அடிப்படையான மாறுதல்களைச் செய்தாகவேண்டும். சமுதாய சீர்திருத்த வேலைகளைமட்டும் செய்துவிட்டு சமுதாயத்தையே மாற்றி அமைத்துவிடக் கனவு காண்பது முடியாதகாரியம். காந்திஜீ நமது சமுதாயத்தை ஒரு புது சர்வோதய சமுதாயமாக மாற்றி அமைக்கவே விரும்பினார். இந்தியாவில் அந்நிய ஆட்சி நடந்துவந்த காலத்தில் காந்திஜி அவர்கள் பல சீர்திருத்த வேலைகளைச் செய்து வந்தாலும், சமுதாயத்தையே மாற்றி அமைப்பதற்கான பல நல்ல திட்டங்களையும் நம்முன் விட்டுச்சென்றிருக்கிறார். பொருளாதார சமத்துவத்தைப்பற்றியும் நிலப்பிரச்னை, சொத்துடைமையில் தர்மகர்த்தா முறை ஆகியவைபற்றியும் காந்திஜீ தீர்க்கமாகச் சொல்லியிருக்கிறார். அரசியல் சுதந்திரமடைந்த இந்தியா விரைவில் பொருளாதார சுதந்திரத்தை அடையவேண்டிய அவசியத்தைப் பலமுறை வற்புறுத்தியிருக்கிறார். இவ்வழியில் அவர் தீவிரமாக இறங்குவதற்குள் இறைவன் அவரைத்தன்னுடன் அழைத்துக்கொண்டார். சோர்வடைந்த நமக்கு உற்சாகமளிக்கும் வண்ணம் வினோபாஜீ இன்று வழி காட்டுகிறார். பொருளாதார விடுதலையடைய பூதான வேள்வியை நடத்திவருகிறார். காந்திஜீ இன்று உயிருடனிருந்தால் இவ்வேலையைத்தான் செய்வார் என்று வினோபாஜியே சொல்லும்போது பூதானத்தின் தன்மையை அறிந்துகொள்வது எளிது.

## மனதில் விழிப்பு ஏற்படச்செய்யுங்கள்.

சத்தியம் அஹிம்சை என்ற இரு உயர்ந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டதுதான் காந்தியம். இந்தப்பண்புகளை புராதன காலமுதல் மனிதன் பெற்றுள்ளான். ஆகவே அது மனிதனைச்சேர்ந்த எந்தப்பிரச்னையையும் எக்காலத்தும் அணுகமுடியும், இம்முறையில் நோக்கினோமானால் சத்தியம், அஹிம்சை என்ற அஸ்தி வாரத்தைக் கொண்டு பொருளாதார சமத்துவத்தையடைய காந்தியத்தின் புதுப்பிரயோகமே பூதான இயக்கம் என்பதை உணரலாம். அரசியல் விடுதலை அடைந்துவிட்ட ஒரு நாட்டிற்கு அடுத்து உடனடித் தேவையானது பொருளாதாரத்துறையில் விடுதலை அந்த நாட்டில் எந்த இயக்கம் பொருளாதார விடுதலையையடையத் திட்டமிட்டு முயற்சிக்கிறதோ அதற்கு மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைப்பது இயற்கையே. மக்கள் சக்தியின் ஆதரவைப் பெற்றுவிட்ட அந்த இயக்கம் தனது லட்சியப்படி சமுதாயத்தை அமைத்துக்கொள்ள வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே காந்திய நிர்மாண ஊழியர்கள் பூதான இயக்கத்தின் மூலம் மக்கள் உள்ளத்தில் விழிப்புஏற்படுத்தி விட்டால் ஒரு சர்வோதயசமுதாயத்தை ஏற்படுத்த மக்களே முன் வருவார்கள்.

சீனாவைப் பார்த்துவிட்டு வந்தவர்களனைவரும் ஒரு முகமாகச்சேர்ந்து கூறும் ஒரு உண்மை என்னவென்றால் அங்கு அரசாங்கத்திட்டங்களில் பொதுஜனங்கள் மிகுந்த ஒத்துழைப்புக் கொடுக்கின்றனர் என்பதுவே. நிலப்பங்கீடு, தனி நபர்களின் வருமானத்திலுள்ள பெருத்த ஏற்றத்தாழ்வைக் குறைத்தல் இதுபோன்று பொருளாதார சமத்துவத்திற்கான வேலைகளைஉடனடியாக அங்கு அரசாங்கம் செய்திருக்கிறது. அங்கு அரசாங்கத்தின் திட்டங்களால் சாதாரண மனிதன்தான் நன்மையடைவதை நிதர்சனமாக உணர்கிறான். அதனால்தான் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு உற்சாகமாக தனது பூரண ஒத்துழைப்பைக் கொடுக்கிறான். எந்த ஒரு அரசாங்கமும் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை முதலில் கவனிக்காமல் மற்ற எத்தனை திட்டங்கள் போட்டாலும் பொது ஜனங்களின் அபரிமிதமான ஆதரவு கிட்டுவதில்லை.

## பூதான இயக்கமே அடிப்படை

காந்திய நிர்மாண ஊழியர்கள் இதை நன்றாய் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாய நாடாகிய

(தொடர்ச்சி 156-ம் பக்கம் காண்க)

கிராமோதயம்

டிசம்பர் 15 **** 1954.

## சுமையைக் குறைத்துக் கொள்ளுங்கள்

நெல்லை ஜில்லா பூமிதான யக்ஞக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ சங்கர் ரெட்டியார் அவர்களுடைய வேண்டுகோள் இந்த இதழில் வெளியாகியுள்ளது. அவர் அனுபவபூர்வமாகக் கூறும் சில சொற்கள் இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு நிலச்சுவான்தாரும் செல்வந்தரும் எண்ணிப்பார்க்கவேண்டியவை,

"சொத்து சேர்க்கவேண்டுமென்ற ஆசை இதுவரை எனக்கு இருந்தது. இவ்வளவு அவ்வளவு அல்ல. ஆனால் இப்போது அதற்கு மாறாக சொத்துடைமையைக் குறைத்துக்கொள்ளவே மனம் சந்தோஷப்படுகிறது" என்று அவர் கூறுகிறார். தனது சொந்த நிலத்தில் பெரும் பகுதியை தானமாகக் கொடுத்துவிட்டதோடு தன் முதலிலும் ஏறக்குறைய நாலில் ஒரு பங்கை தானமாகக் கொடுத்துள்ளார்.

சரித்திர பூர்வமாய் நிலப் பிரச்னை பலாத்காரமாகத்தான் தீர்க்கப்பட்டுள்ளது; தத்துவங்களுக்கு ஒவ்வாததாக பூமிதான இயக்கம் இருக்கிறது என்று கூறிக்கொண்டிருப்பவர்களைப் பற்றி அக்கறை கொள்ளவேண்டாம். நமது பாரத நாட்டின் பண்பு ஆத்மீக சக்தியின் அடிப்படையில் அமைந்ததேயொழிய லோகாயதவாதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஆகவே லோகாயவாதத் தத்துவங்களைப் பெரிதாக எண்ணி நாம் கவலையுறவேண்டியதில்லை.

1957க்குள் 5 கோடி ஏக்கர் நிலதானம் கிடைக்கவேண்டும் என்பது வினோபாஜியின் கருத்து. இந்த நிலத்தைப் பிரித்துக் கொடுக்கும்பொழுது அதைப் பெற்றுக்கொள்ளும் விவசாயிகளுக்கு பயிர் செய்வதற்கு வேண்டிய மாடு, ஏர், கிணறு, விதை முதலிய சாதனங்களையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதற்கு வேண்டிய சம்பத்துதானம் பெறும் முயற்சியில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் முனைந்துள்ளார்,

நெல்லை ஜில்லாவிற்கு ஸ்ரீ சங்கர் ரெட்டியார் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோள் தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்துவதாகும்.

ஆகவே தமிழ்நாட்டிலுள்ள நிலச்சுவான்தார்கள் அனைவரும் மனமுவந்து தாராளமாக நிலதானம் செய்து தமிழ்நாட்டின் லட்சியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள பகுதியைப் பூர்த்தி செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

— அ. பாலகிருஷ்ண பிள்ளை

## கைனூர் ஜீவன்தானிகள் முகாம்

கேரளத்தில் ஜீவன்தானிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக 7-12-54 முதல் ஒரு பயிற்சி முகாம் கேரள பூதானக் கமிட்டியின் சார்பில் அகில இந்திய சர்வ சேவா சங்க காரியதரிசி ஸ்ரீ அண்ணாசாகிப் சகஸ்ரபுத்தே அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகிறது. மேல் விவரங்கள் அடுத்த இதழில்.

இக்கண்டவாரியார்,
கன்வீனர், கேரள பூதானக் கமிட்டி.

## தேடி வருவார்கள்

— டாடு —

அக்டோபர் 3, இன்று யூனியன் திட்டமந்திரி ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தா வினோபாஜியைச் சந்தித்தார். மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசும்பொழுது வினோபாஜி "பிரிட்டிஷார் காலத்தில் ஆரம்பித்த சுரண்டல் முறை சுதந்திர இந்தியாவிலும் தொடர்கிறது. கிராமத்தொழில்கள் ஒவ்வொன்றாய் நசித்துவருகின்றன. நம்மை நாமே உருவாக்குகிறோம். சாவி நம் கையில்தான் இருக்கிறது. நாஸிக் பிரஸில் அச்சிடப்படும் பணத்தில் நமக்குள்ள மோகத்தைக் கொன்றுவிடுவோமானால் இது இயலும். நீங்கள் உற்பத்திசெய்யும் பொருள்களை நகரமக்களுக்கு விற்பதை நிறுத்திவிடுங்கள். அதேபோல் அவர்கள் தயாரிக்கும் பொருள்களையும் உபயோகிக்காதீர்கள். கிராமத்தில் விளையும் பொருள்களிலிருந்து சாமான்களை கிராமத்திலேயே தயாரிக்க முற்படுங்கள். அவற்றை நீங்கள் உபயோகப்படுத்துங்கள். மிகுந்ததை மட்டும் வெளியே அனுப்புங்கள். பிறகு நகரத்துமக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளுக்கு உங்களைத்தேடி ஓடி வருவார்கள். அப்போது உற்பத்திக்காக உழைப்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்" என்று கூறினார்.

---

(155-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்

நமது இந்தியாவில் நிலப்பிரச்சனையைத்தான் முதலில் கவனிக்கவேண்டும். அதற்குரிய சாதனம்தான் பூதான இயக்கம். நிலம் ஏனைய சொத்து எல்லாம் கிராமப் பொதுவானபின்பு கிராமக்குடிசைத்தொழில், புதிய கல்வி, கிராமப்பஞ்சாயத்து ஆட்சி இம்மாதிரியான மற்ற வேலைகளையும் லகுவில் சாதித்துக்கொள்ளலாம். தனது வயிற்றுக்குக் கஞ்சி இல்லையே என்று கதறிக்கொண்டிருக்கும் விவசாயக்கூலியிடம் கிராம சுகாதாரம், முதியோர் கல்வி இவைபற்றிப்பேசினால் நம்மைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். முதலில் அவனது பசியை ஆற்றினாலல்லவா மற்றவைபற்றி கவனிக்க இடமேற்படும். பசித்த வயிறுகள் உள்ள ஒரு நாட்டில் எந்த இயக்கமும் நன்மைசெய்ய விரும்பினால் முதலில் பசித்த வயிறுகளுக்கு உணவு கொடுக்கவேண்டும். இதை காந்திய முறையில் சாதிக்க பூதான இயக்கம் பிரயத்தனப்படுகிறது.

ஆகவே, காந்திய நிர்மாணத்திட்டங்கள் எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடைய ஒரு கோர்வையென்றால், அவற்றில் ஊடுருவிப்பாயும் ஜீவநாடியாக விளங்குகிறது பூதான இயக்கம். ஏதோ அங்குமிங்கும் சாவதானமாக நடந்துவந்த நிர்மாண வேலைகளுக்கெல்லாம் பூதான இயக்கத்தால் இன்று ஒரு ஜீவகளை ஏற்பட்டிருக்கிறது; ஒரு புத்துணர்ச்சி கிளம்பியிருக்கிறது; உணர்ச்சித்துடிப்பு தெரிகிறது பூதான இயக்கம் இந்நாட்டில் வெற்றியடைவதைப் பொறுத்திருக்கிறது மற்ற நிர்மாண வேலைகளின் வெற்றி, ஆகவே காந்தீய நிர்மாணத்துறைகளில் வேலைசெய்யும் எல்லா ஊழியர்களுக்கும் உடனடியான முதல் வேலை பூதான இயக்கம்தான். தமிழ்நாட்டிலுள்ள நிர்மாணஊழியர்கள் இதை உணர்ந்தால்போதும். ஒன்றரைலட்சம் ஏக்கராகிய தமிழ்நாட்டுக்கோட்டாவை வெகுசீக்கிரம் பூர்த்திசெய்துவிடலாம். எல்லா காந்தீய வேலைகளிலும் முன்னிற்கும் தமிழ்நாடு பூதானத்திலும் முதல் ஸ்தானத்தைப் பெறமுடியும். ★

3-JAN 1956

# வேலை செய்ய முந்துவார்

ரா. வெங்கட்டராமன்

விடிய ஒரு நாழிகைப்பொழுது இருந்தது. வேலன் போர்வையை நீக்கிவிட்டு எழுந்து உட்கார்ந்தான். கைகளை உதறிச் சோம்பல் முறித்து ஒரு கொட்டாவி விட்டான். எழுந்து வாசற் கதவைத் திறந்தான். பனிவாடை சீறிக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தது. கதவு திறந்த சத்தமும் பனிக்காற்றும் வள்ளியை விழிக்கச் செய்துவிட்டன.

"என்னாது இந்நேரத்திலேயே புறப்பட்டீங்க, இந்த இருட்டிலே"

"விடிவெள்ளி மொளச்சுட்டுது புள்ளே. காட்டுவேலையை இன்னிக்கே ஆரம்பிக்கணும்" என்றான் வேலன்.

"கொஞ்சம் பொறுங்க, வாசத்தொளிச்சுப் புடறேன்" என்று வள்ளியும் எழுந்து சாணத்தைக் கரைத்து வாசல் தெளித்துப் பெருக்கினாள்.

"நானும் ஓங்ககூட வர்ரேன். நீங்கமட்டுமா வேலை செய்யணும்" என்றாள் வள்ளி.

"கொஞ்ச நேரம் கழித்து கஞ்சி கொண்டுக்கிட்டு வா புள்ளே, நான் முன்னாலே போரேன்" என்று சொல்லி மண்வெட்டியை எடுத்துக் கொண்டு வேலன் புறப்பட்டான்.

வள்ளிக்குத் தன் புருஷன் இவ்வளவு அக்கரையுடன் வேலைக்குச் செல்வது ஆனந்தமாக இருந்தது.

"எல்லாம் அந்த மகாராசன் புண்ணியம். அவரு நல்லாயிருக்கணும்" என்று மனதுக்குள் வாழ்த்தினாள்.

அவள் மனதில் பழைய நினைவுகள் திரையிட்டன.

* * *

இரவு ஜாமம் வரை சீட்டாடிவிட்டு வருவதும் பகலில் சூரியன் உச்சியை நெருங்கும்போது படுக்கையை விட்டு எழுந்திருப்பதுமே வேலனின் வெகு கால வழக்கம். அதனால் அவனைச் சோம்பேறி என்று சொல்ல இயலாது.

"விடிஞ்சு போனாலும், விடியுமுன்னே போனாலும் நமக்குக் கிடைக்கிற சம்பளம் மாசம் ஒரு கலம் நெல்லுத்தானே புள்ளே" என்பான். காலாகாலத்தில் வேலைக்குப் போகும்படி வள்ளி வற்புறுத்தினால் அவன் கூறும் பதில் இது. அவர்கள் இருவருக்கும் சாப்பாட்டுக்கு, துணிமணிக்கு, நல்லது பொல்லதுக்கு எல்லாவற்றுக்கும் அந்த ஒரு கலம் நெல்தான் வருமானம்.

"செலவுக்குப்பத்தலை" என்று வள்ளி சில நாட்கள் ஆச்சி வீட்டில் பத்துப்பாத்திரம் தேய்க்க வீடுவாசல் கூட்ட என்று வேலை செய்தாள்

"பகலெல்லாம் பாடுபட்டுட்டு அவரு வீட்டுக்கு வந்தா ஒரு வேந்நீர்கூட வச்சுக்குடுக்க முடியலயே" என்று அந்த வேலையையும் விட்டுவிட்டாள். ஆனால் தான் வேலை செய்து சம்பாதித்த சம்பளத்துக்கு இரண்டு கோழிக் குஞ்சு வாங்கிவிட்டாள். பக்கத்துக் கொல்லையில் மேய்ந்து குஞ்சுகள் கொழு கொழுவென்று வளர்ந்துவிட்டன. முட்டையிடும் பருவம். கோழிகளைத் திறந்து வெளியில் மேயவிட்டாள்.

ஒரு மாதத்திற்கு முன் தன் வீட்டிற்கு வந்திருந்த பெரியவர், அவர்தான் ஆனந்தர், சொன்ன வார்த்தைகளை மீண்டும் எண்ணினாள்.

"வினோபா பாவேதான் நமக்கு இப்பொழுது மகாத்மா காந்தி. அவர் முதலாளிகள் நிலத்தையெல்லாம் தானமாக வாங்கி உழுது பிழைப்பவர்களுக்குத் தருகிறார்" என்று அவர் சொன்னது அவளுக்கு அன்று ஆச்சரியமாகப் பட்டது. அன்று வேலன் அவரைக் கேலி செய்தான்.

"போங்கய்யா எமனுக்கு ஏழு பிள்ளை குடுத்தாலும் உசிரோடெ ஒரு பிள்ளை குடுக்கமாட்டாங்கய்யா. ஒரு வரப்புக்கு ஒம்பது கோர்ட்டுக்குப் போரவங்க மனசோடே நெலத்தைக் குடுப்பாங்களா ஐயா" என்றுதான் கூறினான்.

ஆனால் பின்னால் நடந்த சம்பவங்கள் வேலனை ஆச்சரியத்தில் மூழ்கடித்தன. அவன் முதலாளி முருகேசம் பிள்ளை கூட 5 ஏக்கர் நிலதானம் கொடுத்துவிட்டார் என்ற செய்தி அவனுக்கு உலக அதிசயமாகப் பட்டது.

பள்ளிக்கூடத்திலே படிக்கிற குழந்தைகள் கூட "ஊரிலுள்ள நிலமனைத்தும் ஊர்ப்பொதுவாம் கடமையே" என்று பாடிச் சென்றதும், பொதுக்கூட்டத்திலே ஆனந்தர் பேசும்போது நிலதானம் கொடுக்க நான், நீ என்று அநேகர் பத்திரம் எழுதிக் கொடுத்ததும் வள்ளிக்கு நினைவு வந்தன.

நிலம் பிரிச்சுக் கொடுக்கறதுக்கு ஊர்க் கூட்டம் நடந்தபோது முருகேசம் பிள்ளை "நான் தானம் கொடுத்த புளியடிப் புஞ்சை 5 ஏக்கரை வேலனுக்குக் குடுங்களேயா" ஊராரைக் கேட்டுக் கொண்டதும், அதை மதித்து அப்படியே வேலனுக்கு அந்த புளியடிப்புஞ்சையைக் கொடுத்ததும் நினைக்க நினைக்க வள்ளிக்கு மனது சந்தோஷத்தால் விம்மியது.

"சரி சிக்கிரம் போகணும்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டாள்.

ஒரு கலயத்தில் கஞ்சியை ஊற்றிக் கொண்டாள். நான்கைந்து மிளகாய்களை வறுத்து எடுத்துக்கொண்டாள். தலையில் கஞ்சிக் கலயமும் இடுப்பில் தட்டுக்கூடையுமாக காட்டுக்கு புருஷனுக்கு உதவியாக வேலை செய்யப் புறப்பட்டாள்.

காட்டில் வேலனும் ஆனந்தரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"வள்ளி, தை பொறந்ததும் இதுலே ஒரு கிணறு வெட்டணும்" என்றான் வேலன்.

"ஆமா பணத்துக்கு எங்கே போறது" என்றாள் வள்ளி.

"நிலத்தைக் குடுத்த மகராசன் அதுக்கும் வழி பண்ணியிருக்காரு" என்று கூறியவாறே ஆனந்தரை நோக்கினான் வேலன்.

# பட்டுக்கோட்டை தாலுக்கா பூமிதான யாத்திரை

தஞ்சை ஜில்லா, பட்டுக்கோட்டைத் தாலுக்கா பூமிதான யாத்திரை பெருமகளூர் பிர்க்காவில் *13—11—54* முதல் *27—11—54* வரை நடைபெற்றது. தஞ்சை ஜில்லா கன்வீனர் ஸ்ரீ T. K. ஸ்ரீனிவாஸய்யர், பட்டுக்கோட்டைத் தாலுகா ஆர்கனேஸர் ஸ்ரீ ச. க. ஸ்ரீனிவாஸன், ஸ்ரீ P. சிங்காரம், ஸ்ரீமதி தங்கம்மாள், ஸ்ரீமதி V. ஞானம்பாள், ஸ்ரீ அ. கோவிந்தசாமி, ஸ்ரீ M. நடராஜன், ஸ்ரீ மாணிக்கம், ஆவணம் ஸ்ரீ கவீஸ்வர வேலாயுதனுர் ஆகியோர் யாத்திரை கோஷ்டியில் கலந்து கொண்டனர்.

*13—11—54* அன்று பேராவூரணியில் யாத்திரை ஆரம்பித்து *27—11—54*ல் மணக்காடு, வீரக்குடி நெல்லியடிக்காடு வந்து பூர்த்தி பெற்றது. யாத்திரை நடைபெற்ற ஊர்களில் எல்லாம் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் ஊர் வலங்கள் நடத்தி பூமிதானப் பாடல்கள் பாடி, பொதுக்கூட்டங்கள் நடத்தி இயக்கம் பற்றியும், எதிர்கால சர்வோதய சமுதாயம் அமைப்பதற்கு அனைவரும் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும் என்பது பற்றியும் கோஷ்டியினர் நன்கு விரிவாகவும் தெளிவாகவும் பேசினர்.

இந்த யாத்திரையின்போது மொத்தம் *17* ஏக்கர் *65½* சென்ட் நஞ்சையும், *8* ஏக்கர் *29* சென்ட் புன்செயும் நிலதானம் கிடைத்திருக்கிறது.

## நிலதானம் கொடுத்தவர்கள்

### 1—11—54 முதல் 3—11—54 வரை.

| | நஞ்சை ஏ. | நஞ்சை செ. | புஞ்சை ஏ. | புஞ்சை செ. |
|---|---|---|---|---|
| **மணக்காடு** | | | | |
| ஸ்ரீ அ. ராமலிங்க மண்கொண்டார் | 1 | 55 | | |
| **பனங்குளம்** | | | | |
| ,, M. R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் | | | | 10 |
| **கொடிவயல்** | | | | |
| ,, அ. ஆதிமூல தேவர் | 0 | 33 | | |
| **முதுகாடு** | | | | |
| ,, செ. சிங்காரம் சேர்வை | 0 | 10 | | |
| | 1 | 98 | | 10 |

### 13—11—54 முதல் 27—11—54 வரை.

| | நஞ்சை ஏ. | நஞ்சை செ. | புஞ்சை ஏ. | புஞ்சை செ. |
|---|---|---|---|---|
| **கழணிவாசல்** | | | | |
| ஸ்ரீ வி. மௌனப்பேசி தேவர் | | | | |
| ,, ராசுத்தேவர் | | | | |
| ,, வயி. ராமசாமி அம்பலம் | | | | |
| ,, கருப்பையா | 2 | 0 | | |
| ,, S ராமசாமி தேவர் | 1 | 0 | | |
| **கொரட்டூர்.** | | | | |
| ,, அ. வேலாயுத தேவர் | 0 | 27 | | |
| ,, கோ. ராமலிங்க தேவர் | | | | |
| ,, ஓ. நடேச தேவர் | | | 0 | 20 |
| ,, பெ. மு. ராமசாமி தேவர் | 0 | 21 | | |
| **ஊமத்தநாடு** | | | | |
| ,, பழனிஷண்முக தேவர் | 0 | 33½ | | |
| ,, கே. உடையப்ப தேவர் | 0 | 25 | | |
| ,, மு. அடைக்கல தேவர் | 0 | 34 | | |
| **ஆலடிக்காடு** | | | | |
| ஸ்ரீ அ. சாமினாத தேவர் | 0 | 68 | | |
| **விளங்குளம்** | | | | |
| ,, மு. ப. சின்னத்தம்பி குடும்பன் | 0 | 14 | | |
| **ருத்திரசிந்தாமணி** | | | | |
| ,, K. நடேசன் சகோதரர்கள் | 0 | 18 | | |
| **பெருமகளூர்** | | | | |
| ,, R. குழந்தைசாமி தேவர் | 0 | 93 | | |
| ,, வெ. சி. மாணிக்க தேவர் | 0 | 5 | | |
| ,, சி. தா. சுப்பையா தேவர் | | | 0 | 33½ |
| ,, வெ. க. செல்லையா தேவர் | 0 | 25 | | |
| ,, மு. திருவெங்கிட தேவர் | 0 | 50 | | |
| **தூராங்குடி** | | | | |
| ,, சி. முருகையா கோனார் | 0 | 1 | | |
| ,, வி. சி. கருப்பையா தேவர் | 0 | 68 | | |
| ,, வி. ராமலிங்க தேவர் | 0 | 32 | | |
| **சோலைக்காடு** | | | | |
| ,, தி. சாமினாத தேவர் | | | 0 | 50 |
| **கல்யாணராமனுதபுரம்** | | | | |
| ,, ச. முனுராமனம்பலம் | 0 | 6 | | |
| ,, க. குழந்தைவேலு அம்பலம் | 0 | 10 | | |
| ,, மு. குப்புசாமி அம்பலம் | 0 | 6 | | |
| ,, ச. கருப்பையா அம்பலம் | 0 | 7 | | |
| ,, மு. ராமசாமி அம்பலம் | 0 | 10 | | |
| **செம்புகமகாதேவிபட்டணம்** | | | | |
| ,, M. R. வைத்திலிங்கம் பிள்ளை | 0 | 20 | | |
| ,, முகமது இப்ராகிம் சாகிப் | 4 | 0 | | |
| **கலக்கமங்கலம்** | | | | |
| ஸ்ரீமதி சா. ந. அம்மாகுட்டி அம்மாள் | | | 2 | 42 |
| ஸ்ரீ பெ. ராம. சிதம்பர தேவர் | | | | |
| ,, ஷண்முக தேவர் | | | 3 | 62 |
| ,, அ. பெரியதம்பி தேவர் | 1 | 54 | | |
| **அத்தாணி** | | | | |
| ,, மு. சிதம்பர தேவர் | 1 | 0 | | |
| **வலயன்வயல்** | | | | |
| ,, கூ. கருப்பணம்பலம் | 0 | 2 | | |
| **மங்கலநாடு** | | | | |
| ,, மு. சன்னாசி அம்பலம் | | | 0 | 20 |
| ,, கா. கருப்பையா தேவர் | 0 | 10 | | |
| ,, வீ. அடைக்கலனம்பலம் | | | 0 | 20 |
| ,, சூப்பி. சிவசாமி அம்பலகாரர் | 1 | 20 | | |
| **விஜயபுரம்** | | | | |
| ,, ரா. பிரமனம்பலம் | | | 0 | 33½ |
| ,, வீ. சி. கருப்பையா அம்பலம் | 0 | 6 | | |
| **நெல்லியடிக்காடு** | | | | |
| ,, நெ. க. சன்னாசி அம்பலம் | 0 | 50 | | |
| ,, வீ. கருப்பையா அம்பலம் | | | | 48 |
| ,, பெ. ரெங்கசாமி கோனார் | 0 | 50 | | |
| மொத்தம் ... | 17 | 65½ | 8 | 29 |

## சம்பத்தி தானம்.

### வலயன்வயல்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ ச. கருப்பணம்பலம் | மரக்கலப்பை | 2 |
| ,, மு. காளிமுத்து | மண்வெட்டி | 1 |
| ,, ரா. பெரியசாமி அம்பலம், | கலப்பை செட் | 1 |

(154-ம் பக்கத் தொடர்ச்சி.)

## நமது சமுதாயம்

விடுகின்றானா? இல்லையேல் வேறு நிறை வாழ்க்கை உளதா? எளிய வாழ்க்கையும் உயர்ந்த சீலம் சிந்தனை இவைகளே மனிதனை உயர்விக்கின்றன என்பது ஆன்றோர் கண்ட பழைய உண்மை. அத்தகைய வாழ்க்கையையே காந்தியடிகளும் நமக்கு விதிக்கின்றார். உணவும் உடையும் வாழவேண்டுவனவேயாயினும் அவையே வாழ்க்கை அல்ல என்பதை நாமனைவரும் உணர்கின்றோம். உண்டு உறங்குவது மாவிற்குப் போதும், மனிதனுக்குப் போதாது. மாக்கள் பிறவற்றை அழித்துத் தின்னும். மனிதன்தான் விளைத்து உண்பவன். அவை கிடைப்பவைகளைப் பயன்படுத்தும், மனிதன் தனக்கு வேண்டியவைகளை ஆக்கிக் கொள்பவன். அவைகளுக்கு தம் தேவை விளங்குவதில்லை. மனிதன் தன் தேவையை கணக்கிட்டுக் கொள்கின்றான். அறிவு பெற்ற அவன் அவைகளிலும் நிறைவாகவும் அமைதியாகவும் வாழவேண்டியவன். தன் தேவைகளைப் பெருக்கி அவைகளை உற்பத்தி செய்ய சிக்கல் முறைகளையும் வகுத்து இறுதியில் இவன் அறிவிற்கு பொருந்தா அளவில் மாக்களின் நியதியில் வாழ்வதானால் அவனுக்குப் பயன் இல்லை. அவன் வாழ்வே பாழாகின்றது.

## பரவல் முறையே உய்யும் வழி

மனிதன் தன் தேவைகளை தன் பாட்டால் பெறுவது நியாயமானது. உணவிற்கும் உடைக்கும் ஆகும் பண்டங்களை தானே விளைவித்துக் கொள்வது அவன் முதற்பாடு. இவற்றைக் கொண்டு தன் பிற தேவைகளையும் அவன் தன் பாட்டால் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். கலப்பை, மண்வெட்டி, கைராட்டை, தறி இவைகள் இவனுக்கு உணவையும் உடையையும் தயாரித்துக்கொள்ள உதவுபவை. அவன் பாடுபடு நிலம், அதில் வேலை செய்ய கருவிகள், பிற கருவிகள் இவைகளை தனதாகப் பெறவேண்டும். தான் உற்பத்தி செய்வது தன் தேவைக்கதிகமாவதானால் அதிகமாவதை பிறருக்கு உதவவோ தனக்கு வேண்டும் பிறிதோர் பண்டத்திற்கு மாற்றாகக் கொடுக்கவோ செய்யலாம். இந்த எளிய முறையில் அமைப்பு பெரிதாக வேண்டுவதில்லை. பாடுபடாதவர் தமக்கென பகுதிகளை ஒதுக்கிவைத்துக் கொள்ள இடமில்லை. மனிதனின் சுதந்திரமோ, திறனோ, முயற்சியோ தாழ்த்தப்படுவதில்லை. முழுப் பயனும் பாட்டாளிக்கே போகின்றது. இந்த எளிய உற்பத்தி முறை பெருஞ்சொத்து வியாபாரம், முதல், முதலிய பிரச்னைகளுக்கு இட்டுச் செல்வதில்லை. காந்தியடிகள் இந்த நேர்முறை பாட்டையும் பரவலாயமரும் உற்பத்தி முறையையும் நம் உய்வழிகள் என்று விளக்கியிருக்கின்றார். ஆயின் அவர் சொல்வதை ஏற்காத அளவிற்கு நமக்கு உலோகாயதத்தில் பற்று உண்டாகியிருக்கின்றது. இம்முறையில் நம் ஆடம்பர வாழ்கை தேய்வுற வழியிருப்பின் சிறந்த ஆத்மீக வாழ்க்கை மலர இடமிருப்பதை நாம் உணர்ந்து கொள்வதில்லை.

## சட்டமும், புரட்சியும் சரியான பலனைத் தராது

பெரும்போட்டு உற்பத்தி முறையே இன்றுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு வழி செய்துள்ளது என்பது தெளிவாகியும் நாம் அம்முறையிலேயே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சமாளிக்க முனைகின்றோம். மேனாடுகளில் வர்க்கப் போராட்டங்களும் புரட்சிகளும் தினம் நடைபெறுகின்றன. அவர்கள் நோய்க் காரணங்களை ஆராயாது நோயின் குறிகளைப் போக்கமுயலும் மருத்துவனைப்போன்று முதலாளியை ஒழித்து பெரும்போட்டு முறை உற்பத்தியை அமர்த்த திட்டமிடுகின்றார்கள். அது பலிப்பதாயினும், முதலாளிகளின் ஆதிக்கத்தை அரசாங்கமே கைக்கொண்டு பொதுமக்களை பொருளாதாரத் துறையிலும் நசுக்கவும் கட்டுப்படுத்தவும் செய்து அவனை இயந்திரமாக்குகின்றது. பெரும்போட்டு உற்பத்தி முறை பொருளாதார ஏற்றத்தாழ்வு, அரசாங்கத்தின் பூர்ணமான ஆதிக்கம் இவைகளை நிலைத்து தனி மனிதனின் வாழ்க்கையைக் குலைப்பதை அவர்கள் உணருவதில்லை. அவர்கள் மனிதனை அடக்கியும், மிரட்டியும் வைத்திருந்தால்தான் அவன் சீரடைவான் என்றும் அவன் வாழ்க்கை சிறப்படையுமென்றும் கொள்கின்றார்கள்.

அரசியலாதிக்கம் விரிந்து மனிதனை சட்டங்களுக்கும் திட்டங்களுக்கும் கட்டுப்படுத்தியே உலகம் சீரடையவுள்ளது என்ற அவர்கள் கொள்கை மனிதனின் சிறந்த பகுதியையும் அவன் சீலத்தையும் பாராட்டுவதில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்க உள்ளவனதைப் பற்ற சட்டங்களைச் செய்கின்றது. அவை புரட்சியில் வலிவாகப்பற்றப்படுகின்றன. ஜனநாயகத்தில் சட்டங்கள் மூலம் அரசாங்க சிப்பந்திகளால் செய்யப்படுகின்றன. இரண்டிலும் மனிதன் மிரண்டு எதிர்ப்பிற்கு வழியின்றி பணிகின்றான். முடிந்தால் ஒளியவைக்கவும் மறைக்கவும் முயலுகின்றான். எப்படியும் தனது பற்றப்பட்டால் அதனினும் அதிகமாக தான் பெறுவதற்கு வழி வகுத்துக் கொள்கின்றான். ஆகையால் அவனை மிரட்டுவதினும் அவனை நியாயத்தை உணரச்செய்வது பயனுள்ளது என்று காந்தியடிகள் கொண்டார். மனிதன் தான் சமுதாயத்துடன் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும், பிறனதைப் பெறுவதோ இழுக்கு என்று உணரக் கூடியவன் என்று கொண்டார். அவன் பிறன் துன்பத்தைத் துடைக்க தன்னால் ஆவதைச் செய்ய கருணை கொள்ளக் கூடியவன் என்பதையும் அடிகள் விளக்கியுள்ளார். அன்பின் அடிப்படையில் அறத்தால் கட்டப்படும் சமுதாயமே நிலையுறும் அதுவே மனித சமுதாயம் என்பதை விளக்கினார். ஆனால் அரசாங்கத்தார்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்க பிறரெல்லாம் தீயவர், ஆட்சிபீடத்தமரும் தாமே சில சம்பன்னர் என்று செல்பவராகையால் மக்களை மடக்க சட்டங்கள் செய்ய முனைகின்றார்கள். அறத்தை ஏற்காத மக்கள் அச்சட்டங்களை ஏமாற்ற வழிகளை ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

## ஏற்றத் தாழ்வகல ஏற்றது பூதானமே

பொருளாதார நிறைவிற்கும் அமைதிக்கும் பரவல் முறை உற்பத்தி சாதனமாவதைப்போல பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்ற சாதனமாவது தானம் என்று கொள்கின்றார் காந்தியடிகளின் முதல் சீடர் வினோபாவடிகள். அவர் அறிவாளி, தவசி, துறவி, பிறர் காணாத மனித மேம்பாட்டை கண்டறியும் தீர்க்கதரிசி. அவர் மனிதன் அன்பு நியாயம் ஈகை இவைகள் நிறைந்தவன், அவனை தன் தன்மையை உணரச்செய்தால் பிறகு சீரமைப்பு வேலை எளிதாகும் எனக்கொண்டு, தனி மனிதனை சீரமைப்பதையே முதல் வேலையாக கொள்கின்றார். மிரட்டல் அடக்கல் இவைகளில் அவருக்கு நம்பிக்கையில்லை. மனிதனை உணர வைத்தால், அவன் உயரிய தன்மையைத் தூண்டிவிட்டால், அவன் எவ்வளவிற்கும் எழக் கூடிய

வன் என்று கொள்பவர். அவர் நாஸ்தீகரல்ல. இறைவன் விருப்பம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் தான இயக்கமாக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றும் பணியை மேற்கொண்டுள்ளார். பூதானம், சம்பத் தானம், அறிவு தானம், இவ்வரிய புனிதத் தொண்டுகளையே ஏற்று மனிதப் பிறவியை ஈடேற்றவுள்ள ஜீவன்தானம் இவைகளை தன் பணியாக ஏற்றுக் கொண்டுள்ளார். அன்பும், அறனும் நிறைந்த உலகில் மக்கள் எவ்வளவோ உயர்ந்து வானுறையும் தெய்வத்திற்கொப்பாவதே அவர் வேண்டும் நிலைமை. இன்றைய பணி இதுவே. நம்பிக்கையும் முயற்சியும் அரிய பயனை அளித்துள்ளன, இனியும் அளிக்க உள்ளன.

---

(153-ம் பக்கத்தொடர்ச்சி) **ஓர் வேண்டுகோள்**

நான் யாருக்கும் பயந்து தானம் செய்யவில்லை பூமிதானம் செய்வதால் ஏழைகளுக்குமட்டுமல்லாமல் பொதுவாக நாட்டுக்கும், ஒரு விதத்தில் எனக்கும் நன்மை என்பதை உணர்ந்தே செய்திருக்கிறேன். நீங்களும் யாருக்கும் பயந்தோ, தாட்சண்யம் பார்த்தோ கொடுக்கவேண்டுமென்று நான் விரும்பவில்லை.

பூமிதானயக்ஞத்தின் அடிப்படை தத்துவத்தை உணர்ந்து கொடுங்கள். கஷ்டப்படும் லட்சக்கணக்கான மக்கள்மீது உங்கள் மனம் மாறுதல் கொள்ளவேண்டுமென்றுதான் பூமிதானயக்ஞம் முற்றிலும் சமாதானத்தையே நோக்கமாகவுடையது. ஆகவே முற்றிலும் துறந்த முனிவரான விநோபாஜீ அவர்களின் நல்ல சொல்லிற்குச் செவிசாய்த்து அவரவர் வைத்திருப்பதற்குத் தக்கபடி ஒரு பங்கு தானம் செய்வதே அறிவுடைமையாகும். அதுவும் காலதாமதம் செய்யாது கொடுப்பதே அதிலும் சிறந்ததாகும்.

உலக நிலைமையோ மிக மோசமாய் இருக்கிறது. உள்நாட்டு ஏழை மக்களின் அதிருப்திக்கும் அளவில்லை. இந்நிலைமை நீடிப்பது யாருக்கும் நன்மை செய்யாது. தீமையே செய்யும். உள்நாட்டுக்குழப்பத்திற்கு ஒருவரும் இடமளிக்கக்கூடாது. எல்லோரும் ஒத்து சந்தோஷமாய் வாழ்வோம். 'நாடெங்கும் வாழ கேடொன்றுமில்லை' என்ற ஆன்றோர் வாக்கு அமுதவாக்கன்றோ?

இதுவரை சிறிய நிலச்சுவான்தாரர்களும் நடுத்தர மானவர்களும்தான் பெரிதும் தானமளித்திருக்கிறார்கள். பெரிய நிலச்சுவான்தார்கள் பலர் நிலைமையை அறிந்து மனம் மாறாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

கால மாறுதலைத்தடுக்க அவர்களால் இயலவே இயலாது.

சில பெரிய நிலச்சுவான்தார்கள் சட்டம் வந்தால் கொடுப்போம். இப்போது ஏன் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறார்கள். இது சரியான நினைப்பாகாது. சட்டம் முன்னோ பின்னோ வரத்தான் செய்யும். அப்போது கொடுப்போம் என்ற பேச்சுக்கு இடம்ஏது? சட்டம் நிலத்தைப்பிடுங்கும். சமாதானமாய் கேட்கும்போது கொடுக்க வராத மனம் நிலம் சட்டத்தால் பிடுங்கப்படும் பொழுது அதிக வேதனையே அடையும். ஆகவே அதைவிட நாம் மனமுவந்து தானம் கொடுத்தலே நல்லது. பன்மடங்கு அது பாராட்டவும்படும். நிலம் கொடுத்தவர்களுக்கும், அதைப் பெறுகிறவர்களுக்குமிடையில் மிகுந்த அந்நியோன்யமும் சந்தோஷமும் பெருகும்.

தானம் கிடைத்த நிலங்களை தகுதியுள்ள ஏழைகளுக்குப் பிரித்துக்கொடுக்க விநோபாஜி மிக நல்ல வழிவகுத்திருக்கிறார். நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதோடல்லாமல் அதை உழுது பயிர் செய்வதற்கு வேண்டிய மாடு, ஏர், கிணறு, விதை முதலிய சாதனங்களைக் கொடுத்து அவர்களை நன்கு உழைத்துப் பிழைக்கச் செய்யவும் பூமிதான யக்ஞம் முன்வந்திருக்கிறது. தானம் வீணாகுமோ என்ற பயம் தவறானது. தானம் செய்ய நம் மனமே மாறும்போது தானம் பெறுகிறவர்களும் ஏன் மனம் மாறி நன்கு உழைத்துப் பிழைக்கமாட்டார்கள்? தானம் வாங்கிய நிலத்தை யாரும் விற்கவும் வாங்கவும் முடியாதபடி செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுமையும் இதுவரை 36 லட்சம் ஏக்கர் தானம் கிடைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் 28 ஆயிரமும், நம் நெல்லை ஜில்லாவில் 6000 ஏக்கரும் கிடைத்திருக்கிறது. நாம் நம் ஜில்லாவில் சேர்க்கவேண்டிய முதல் கோட்டா 15 ஆயிரமாகும். ஒவ்வொரு நிலச்சுவான்தாரும் தன் கடமையை உணர்வாரானால் கோட்டா எளிதில் பூர்த்தியாகிவிடும். ஆகவே இதுவரை தானம் செய்யாத நிலச்சுவான்தார்கள் பூமிதான யக்ஞத்தால் ஆகும் பயனை நன்கு உணர்ந்து தத்தம் பங்கை விரைவில் தானம் செய்ய முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| | |
|---|---|
| 1-12-'54<br>திருநெல்வேலி<br>ஜங்ஷன். | **M. G. சங்கர்** M. L. A.,<br>**கன்வீனர்,**<br>நெல்லை ஜில்லா பூதான கமிட்டி |

---

## கோவை ஜில்லாவில்
## சம்பத் தானம் கொடுத்த அன்பர்கள்.

புளியமரத்துப்பாளையம் M. அருமைநாயகம் வருடம் ரூ. 12/-ம், சாதாரண பிரஞ்சு ரன்னர் வருடம் ரூ. 6/-ம் சம்பத்தானம் கொடுக்க வாக்களித்துள்ளதாய் புளியமரத்துப்பாளையம் சர்வோதய வாசகசாலை காரியதரிசி அறிவிக்கிறார். இவர்களுடையசிறந்த தானம் வழிகாட்டுவதாக.

---

## வருந்துகிறோம்

காந்திநகர் தொழிற்சாலையில் சுமார் 10 வருடங்களாக தச்சுவேலை செய்து வந்த ஸ்ரீ A. கிருஷ்ணசாமி சென்ற மாதம் காலமாகிவிட்டார். அவருடைய குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

## இந்த இதழில்.

| | |
|---|---|
| உழைப்பவனே உண்மையான முதலாளி | 153 |
| நிலச்சுவான்தார்களுக்கு ஓர் வேண்டுகோள் | 153 |
| நமது சமுதாயம் | 154 |
| ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர் | 155 |
| சுமையைக் குறைத்துக் கொள்ளுங்கள் | 156 |
| தேடி வருவார்கள் | 156 |
| வேலைசெய்ய முந்துவார் | 157 |
| பட்டுக்கோட்டை தலூக்கா பூமிதான யாத்திரை | 158 |

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.